பிறகு இவன் தோலினாலும் எலும்பினாலும் செய்யப்பட்ட எல்லாவிதமான பாபங்களிலிருந்தும் விடுபடுகிறான். எல்லா பூதங்களையும் வெற்றி பெறுகிறான். பிறகு பூதம், பிரேதம் பிசாசு, பிரும்ம ராட்சஸ், யக்ஷஸ், யமதூதர்கள், வேதாளம், துர்க்கையின் ஒரு பயங்கரமான வேலைக்காரி (சாகினி) டாகினி (பெண் பிசாசு) பாம்பு, புலி, திருடர்கள் முதலியவைகளால் ஏற்படும் தொந்தரவுகள், தடங்கல்களை எல்லாம் நீக்கி அவையாவும் என்னைச் சூழ்ந்துகொண்டு பார்க்கட்டும் என்னைக் காத்தருளட்டும் என்று வேண்ட வேண்டும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

IV. குஹ்யம் முதல் மஸ்தகம் இறுதியாக 6 அங்கந்யாஸங்கள்

1. मनोज्योतिः ..... घृतेन।

குஹ்யத்திற்கு வணக்கம்

2. अबोहयग्निः ..... नाकमच्छ।

நாபிக்கு வணக்கம்

3. अग्निर्मूर्धा ..... जिन्वति।

ஹ்ருதயத்திற்கு வணக்கம்

4. मूर्धानं दिवो ..... जनयन्त देवाः।

கழுத்திற்கு வணக்கம்

5. मर्माणि ते ..... अनुमदन्तु देवाः।

முகத்திற்கு வணக்கம்

6. जातवेदा यदि वा ..... अभ्याववृथत्स्व।

தலைக்கு வணக்கம்

பிறகு ஆத்மரக்ஷை செய்ய வேண்டும்

ब्रह्मात्मन्वदसृजत ..... आत्मने नमः

என்கிற மந்திரம் வரை

Digitization by Hindu-Heritage-Foundation of Aurora, HHEA (USA)

V. ஹ்ருதயம் முதல் அஸ்த்ரம் இறுதியாக 6 அங்கந்யாஸங்கள்

1. येनेदं भूतं முதல் य इदं शिवसंकल्पं

   இறுதியாக, '37 சிவசங்கல்ப மந்திரங்கள்' பாராயணம் செய்து 'ஹ்ருதயாய நம:' என்று கூறி மார்பைத் தொட வேண்டும். இது முதல் ந்யாஸம்.

2. सहस्रशीर्षापुरुष ..... साध्या: सन्ति देवा:।

   என்று 'புருஷஸூக்தம்' சொல்லி 'சிரஸே ஸ்வாஹா' என்று சொல்ல வேண்டும்.

3. अद्भय: संभूत: ..... सर्वं मनिषाण।

   என்று 'உத்தரநாராயண மந்திரம்' கூறி 'சிகாயை வஷட்டு' என்று கூற வேண்டும்.

4. आशुश्शिशान: ..... शर्म यच्छतु।

   என்று 'அப்ரதிரத மந்திரம்' கூறி 'கவசாயஹூம்' என்று சொல்ல வேண்டும்

5. प्रतिपूरुषमेककपालात्रिर्वपति: एकमतिरिक्तं ... कृत्तिवासा:।
   प्रतिपूरुषमेककपालात्रिर्वपति। जाता एव प्रजा –
   रुद्रान्निरवदयते ..... अस्यामेव प्रतितिष्ठन्ति।।

   என்று 'ப்ரதிபூருஷ இரண்டு மந்திரங்களை'யும் கூறி 'நேத்ரத்ரயாய வௌஷட்' என்று சொல்ல வேண்டும்.

6. त्वमग्ने रुद्र ..... ज्योतींष्यर्चय:।
   त्वमग्ने रुद्र ..... भुर्भुवस्स्वस्स्वाहा।

என்று 'இரு சதருத்ரீய மந்திரங்களைக்' கூறி 'அஸ்த்ராயபட்' என்று கூறவேண்டும். பஞ்சாங்கம் ஒரு தடவை ஜபிக்க வேண்டும். ஸத்யோஜாதம் முதல் ஈசானம் வரை ஐந்து பஞ்சபிரும்ம மந்திரங்கள். இதுதான் சிதம்பரத்தில் ஜபிக்கப் படுகிறது. அபிநவ சங்கராச்சார்ய பாஷ்யத்திலும் காணப்படு கிறது. ஆனால் மந்திர மஹார்ணவத்தில் வேறு ஐந்து மந்திரங்கள் கூறப்பட்டுள்ளன. அதாவது,

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

1. हँसत् शुचिषत् ..... बृहत्।
2. प्रतद्विष्णुः ..... भुवनानि विश्वा।
3. त्र्यम्बकं ..... मामृतात्।
4. तत्सवितुर्वृणीमहे ..... नाम नामैव नाममे ।
5. विष्णुर्योनिम् ..... पुष्करस्रजा।

பிறகு ஸாஷ்டாங்க நமஸ்காரம் எட்டு செய்ய வேண்டும்.

उरसा शिरसा दृष्ट्या मनसा वचसापि च।
पद्भ्यां कराभ्यां कर्णाभ्यां प्रणामोऽष्टाङ्ग उच्यते।।

மார்பாலும், தலையாலும், பார்வையாலும், உள்ளத்தாலும், சொல்லாலும், கால்களாலும், கைகளாலும், காதுகளாலும் செய்யக் கூடியது.

1. हिरण्यगर्भस्समवर्तत ..... विधेम। उरसानमः।
மார்பால் நமஸ்காரம் பண்ணுகிறேன்
2. यः प्राणतो ..... विधेम। शिरसानमः।
தலையால் வணங்குகிறேன்
3. ब्रह्मजज्ञानं ..... विवः। दृष्टिभ्यां नमः।
கண்களால் வணங்குகிறேன்
4. महीद्यौः ..... भरीमभिः। मनसा नमः।
உள்ளத்தால் வணங்குகிறேன்
5. उपश्वासयत् ..... शत्रून्। वचसा नमः।
சொல்லால் வணங்குகிறேன்
6. अग्ने नय ..... विधेम। पद्भ्यां नमः।
கால்களால் வணங்குகிறேன்
7. याते अग्ने..... स्वाहा । कराभ्यां नमः।
கைகளால் வணங்குகிறேன்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHF A(2017)

8. इमं यम ..... मादयस्व। कर्णाभ्यां नमः

காதுகளால் வணங்குகிறேன்

என்று கூறி உள்ளத்தில் ஸ்ரீருத்ர உருவாக சிவபெருமானை தியானம் செய்ய வேண்டும்.

शुद्धस्फटिकसंकाशं ..... मुनिसहस्रसेवितम्।

என்று ஏழு ச்லோகங்களால் தியானம் செய்ய வேண்டும் பிறகு அபிஷேகத்திற்காக மௌனமாக வெண்ணிறஆடை உடுத்திக்கொண்டு ஈசுவரனை நோக்கி நின்றுகொண்டு சரீரத்தில் பிரஜனனம் முதல் சர்வாங்கம் முடியவும் நாக்கு முதல் ஸர்வாங்கம் முடியவும் இரு பதினாறு அங்கன்யாச மந்திரங்களைக் கூற வேண்டும்.

1. பிரஜனனம் - பிரும்மா
2. இருகால்கள் - விஷ்ணு
3. இருகைகள் - சிவன்
4. இருதோள்கள் - இந்திரன்
5. வயிற்றில் - அக்னி
6. ஹ்ருதயத்தில் - சிவன்
7. கழுத்தில் - எட்டு வசுதேவதைகள்
8. வாயில் - ஸரஸ்வதி
9. இரு மூக்குகளில் - காற்று தேவதை
10. இரு கண்களில் - சந்திரன், சூரியன்
11. இரு காதுகளில் - அசுவனி தேவதைகள்
12. நெற்றியில் - 11 ருத்ர தேவதைகள்

    மண்டையில் - 12 சூரிய தேவதைகள்
13. தலையில் - மஹாதேவர்

    தலைமயிர் முடிச்சில் - வாமதேவர்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

14. பின்புறத்தில் - பினாகம் என்னும் வில்லை ஏந்திய சிவன் எதிரில் - சூலத்தைக் கையில் ஏந்திய சிவன். இருபுறங்களிலும்-பார்வதி, பரமசிவன் இருவர்கள். நான்குபுறங்களிலும் - காற்று தேவதை

15. அதற்கும் வெளியே நான்கு புறத்திலும்-தீவர்த்தியை கையில் ஏந்திய தேவதைகள்

16. எல்லா அங்கங்களிலும் - எல்லா தேவதைகள் இருந்து என்னை பாதுகாக்கட்டும்.

மீண்டும் 16 தேவதா ந்யாஸங்கள்

1. அக்னி-வாக்கு. ஹ்ருதயம்-பிரும்மம்-நாக்கு.

2,3. வாயு-உயிர்-ஹ்ருதயம்-பிரும்மம்-மூக்குகள்.

4,5. சூர்யன்-கண்-ஹ்ருதயம்-பிரும்மம்

6. சந்திரன்-மனது-ஹ்ருதயம்-பிரும்மம்-மார்பு.

7,8. திக்குகள்-காதுகள்-ஹ்ருதயம்-பிரும்மம்.

9. ஜலங்கள்-வீர்யம்-ஹ்ருதயம்-பிரும்மம்-ப்ரஜனனம்

10. பூமி-சரீரம்-ஹ்ருதயம்-பிரும்மம்.

11. மூலிகை-மரங்கள்-மயிர்கள்-ஹ்ருதயம்-பிரும்மம்-மயிர்கள்

12,13. இந்திரன்-வலிமை-ஹ்ருதயம்-பிரும்மம்-இருகைகள்.

14. மேகம்-தலை-ஹ்ருதயம்-பிரும்மம்-தலை.

15. ஈசானம்-கோபம்-ஹ்ருதயம்-பிரும்மம்-ஹ்ருதயம்.
ஆத்மா-சரீரம்-ஹ்ருதயம்-பிரும்மம்-ஹ்ருதயம்.

16. ஆத்மா -ஆயுள் -நெருப்பு-ஒளிகள் -ஹ்ருதயம்- பிரும்மம் -அனைத்து உறுப்புகள்.

இவ்வாறு அந்தந்த அங்கங்களைத் தொட்டு அந்தந்த தேவதைகளை ஸ்மரித்து அவைகளை உள்ளத்தில் அடக்கி உள்ளத்தை ஜீவனில் அடக்கி ஜீவனை பரப்பிரும்மத்தில் காண்கிறது அந்தர்முக ந்யாஸமாகும். இதைச்சொல்லிவிட்டு

Digitization by Hindu-Heritage-Foundation.org (USA)

அந்த ஜீவாத்மாவை சந்தனம், அக்ஷதை, பில்வம் முதலிய பத்ரம், மலர்கள், வாசனைப்புகை, விளக்கு, அன்னம், தின்பண்டங்கள் முதலிய நைவேத்யம், காளாஞ்சி முதலியவைகளால் மானசீகமாக உபசாரங்களைச் சேர்ப்பித்து உள்ளத்தில் சிவபெருமானை இருக்க வரவேண்டுதல்,

''மனிதர்களாலும், சித்தர்களாலும், தேவர்களாலும், அரக்கர்களாலும், ஆராதிக்கப்பட்ட மஹேசனான உன்னை பக்தியோடு ஆராதனம் செய்ய விரும்புகிறேன். என்னுடைய பூஜையை ஏற்பதற்காக மனோவேகத்தில் செல்லக் கூடியவைகளும், வலிமை வாய்ந்தவைகளும், காற்றினாலும் வெற்றிபெற முடியாதவைகளும், கொடிகளுடன் கூடிய நல்ல அறிவுணர்ச்சி உள்ள குதிரைகளைக் கொண்டு திக்தேவதைகள் உன்னை அழைத்து என்உள்ளத்தில் இருத்த வேண்டும்'' என்று கூறி பகவான் வந்துவிட்டதாக எண்ணி உள்ளத்தில் சிவபிரானை ஆவாஹனம் செய்கிறேன்.

'' சுவாமி! அனைத்துலகத்தலைவரே! பூஜை முடியும் வரை என் ஆத்மலிங்கத்தில் தாங்கள் அன்புடன் வீற்றிருக்க வேண்டும்'' என்று வேண்டிக் கொண்டு மந்திரங்கள் கூறி (1) ஆஸனம் (2) பாத்யம் (3) அர்க்யம் (4) ஆசமனீயம் (5) ஸ்நானம், (6) ஆடை, (7) பூணூல் (8)சந்தனம் (9) அக்ஷதைகள் (10) மலர்கள், (11) வாசனைப்புகை (12) நெய் திரிதீபம் (13) அன்னம், இனிப்பு தின்பண்டங்கள் (14) வெற்றிலை பாக்கு (15) மந்திரங்கள் கூறி மலரஞ்சலி (16)பிரதக்ஷண நமஸ்காரங்கள் என்ற உபசாரங்கள் செய்ய வேண்டும்.

(1) வெள்ளெருக்கம்பூ (2) சம்பங்கிப்பூ, (3) சுரபுன்னைப்பூ (4) நந்தியாவர்த்தைப்பூ (5) பாதிரிப்பூ (பருத்திப்பூ) (6) கொக்கு மந்தாரைப்பூ (கண்டங்கத்திரிப்பூ) (7)கஸ்தூரி அலரிப்பூ (8) காசித்தும்பைப்பூ ஆகிய எட்டு மலர்களால் எட்டு சிவநாமாக்களைச் சொல்லி சிவனையும், எட்டு அம்பிகையின் நாமாக்களைச் சொல்லி அம்பாளையும், எட்டு மஹாதேவஸுத நாமாக்களைச் சொல்லி மஹாதேவ குமாரர்களையும் அர்ச்சனைசெய்து முடித்து முன்போலவே

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அவர்கள் பெயரைக்கூறி பால் கலந்த நீரால் தர்ப்பணம் செய்ய வேண்டும்.

பிறகு தன்னை ருத்ரனாகவே பாவித்து ருத்ர காயத்ரியையும், ருத்ர தசாக்ஷரியையும் 10, 100, 1000 அதற்கு மேல் முடிந்தஅளவு ஜபம் செய்யவேண்டும். பிறகு ருத்ரஜபம் செய்கிறவனுக்கு ஆயுளும், நன்மக்கட்பேறும் மற்றும் வேத கர்ம அதிகார சித்தியும் ஏற்பட வேண்டுதல் வேண்டும்.

பிறகு லிங்கத்தின் சிரஸில் தங்கக்கலசத்தினால் தீர்த்த அபிஷேகமும், பால், தயிர், தேன், நெய், கருப்பஞ்சாறு, மாம்பழச்சாறு, இளநீர் மற்றும் பல வகையான பழரசங்களால் அபிஷேகம் செய்யவேண்டும். இவை கிடைக்காவிடில் நீரினாலும் அபிஷேகம் செய்யலாம்.

ருத்ரத்தை ஒரு தரம் சொல்லி சமகத்தில் ஒரு அனுவாகம் சொல்லி ஒரு அபிஷேகம் பூர்த்தி செய்ய வேண்டும். இது போல் ஒவ்வொரு தடவையும் ருத்ரம் சொல்லி சமகம் ஒரு அனுவாஹம் கூறி 11 அபிஷேக திரவியங்களால் அபிஷேகம் செய்ய வேண்டும். இவ்விதம் செய்தால் பாபம் நீங்கும், பிணி விலகும், நல்வாழ்க்கை கிட்டும். கோரியது கிடைக்கும், செல்வம் பெருகும், அமைதி கிட்டும். புஷ்டி ஏற்படும். மகிழ்ச்சி அடையும், நற்பொருள் பெருகும், ஆயுள் வளரும், ஆரோக்கியம் ஏற்படும், அன்னம் பெருகும், மக்கட்பேறு கிடைக்கும், கோ கிடைக்கும், மோக்ஷம் கிடைக்கும், இவ்வாறு பலவகைப் பயன்களை அடையலாம்.

ஜபம்செய்யும் பிராம்மணர்களுக்கு வெள்ளி, தங்கம் இலைகளால் அலங்காரம் செய்யப்பட்ட கன்றுகளோடு கூடிய 10 பசுமாடுகளையும், ஒரு காளை மாட்டையும் தக்ஷிணையாகக் கொடுக்க வேண்டும். அது இல்லாவிடில் ஒரு பசுவையாவது தக்ஷிணையாகக் கொடுக்க வேண்டும். ஜபம்செய்த பிராம்மணர்களுக்கு அறுசுவை உண்டி அளிக்க வேண்டும். இவ்வாறு செய்தால் லக்ஷம் அசுவமேதயாகம் செய்த பயனை அடையலாம் என்று போதாயன மஹரிஷி கூறுகிறார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America, HUFA (USA)

ருத்ரமந்த்ர ஜபம்

இதற்கு அகோரரிஷி, ருத்ரன்தேவதை, சதருத்ரீய ஜபத்தில் சம்பந்தம், காயத்ரி,திருஷ்டுபு, பங்த்தி, அனுஷ்டுபு, ஜகதி சந்தஸுகள். ஸாம்பஸதாசிவ ப்ரீதி பயன், அக்னி ஹோத்ரம், தரிசபூர்ணமாசம், சாதுர்மாஸ்யம், நிரூடபசுபந்தம், ஜோதிஷ் டோமம், சர்வகிருது ஆகிய ஆறுயக்ஞ சொரூபியான ருத்ர மந்திரம் கூறி கரஅங்கந்யாஸம் செய்து திக்பந்தம் செய்ய வேண்டும்.

த்யானம்

பாதாளம் வரையிலும், ஆகாசம் வரையிலும் உள்ள பதினான்கு உலகங்களையும் பரவி நிற்கும் பிரகாசிக்கின்ற ஸ்படிகலிங்கத்தின் சிரஸில் பூர்ணசந்திரனின் அமிர்த தாரையால் இடையறாது அபிஷேகம் நடைபெறுவதாக மனதில் த்யானம் செய்துகொண்டு, ருத்ர மந்திரங்களை கீழ்க்கூறியபடி சமகத்துடன் சேர்த்து ஜபம் செய்து அபிஷேகம் செய்தால் வேண்டியது கிடைக்கும். கடைசியில் மோக்ஷம் அடையலாம்.

''பிரும்மாண்டம் வரை பரவிய தேகமுள்ளவர்களும், வெண்ணீற்றினாலும், பாம்புகளாலும் ஒளிருகின்றவர்களும், கழுத்தில் நீலநிறம் கொண்டவர்களும், ஜடையோடு கூடியவர்களும், சந்திரனைத் தலையணியாகக் கொண்டவர் களும், பயங்கரமான வில்லைக் கையில் உடையவர்களும், மூன்று கண்களோடு கூடியவர்களும், ருத்ராக்ஷ மாலையோடு கூடியவர்களும், மிகப்பெருமை வாய்ந்தவர்களும், ருத்ர மந்திரத்தால் தெரிவிக்கப்பட்ட உயர்வை உடையவர்களும், சிவபிரானின் உருவமாக விளங்குபவர்களுமான ஆயிரக் கணக்கான ருத்ரர்கள் எங்களுக்கு சௌக்யத்தை அளிக்கட்டும்'' என்றுகூறி பஞ்சபூஜா மந்திரங்களைச் சொல்லி ருத்ரஜபம் துவங்க வேண்டும்.

ஜபமுறை

★11 பிராம்மணர்களை வரித்து மஹாந்யாஸம் ஒரு தடவை கூறி ஓர் ஆவர்த்தி ருத்ரஜபம் செய்து உடன் சமகம் ஒரு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அனுவாகம் ஜபம் செய்து மறுபடியும் ருத்ரம் ஒரு ஆவர்த்தி, சமகம் இரண்டாவது அனுவாகம், இது போல் 11 ஆவர்த்திகள் 11 சமக அனுவாகங்களுடன் ஜபம் செய்து பூர்த்தி செய்வதே ருத்ரஏகாதசினி என்று கூறப்படுகிறது.

60 வயது பூர்த்தி சாந்தியிலும், உடற்பிணி நீங்கவும், இது செய்யப்பட்டு வருகிறது. இந்த ஜபமானது 11 X 11= 121 ஆவர்த்தி ருத்ரஜபம் ஆகும். 121 X 11= 1331 இது மகா ருத்ரத்தின் ஜபக்கணக்கு 121 நபர்கள் 11 ஆவர்த்தி ஜபம் செய்தால் 1331 ஆவர்த்தி ஜபமாகும். இதுதான் மஹாருத்ரம். 1331 X 11= 14641 ஆவர்த்தி ஜபம் செய்வது அதிருத்ரமாகும். 1331 நபர்களை வைத்துக் கொண்டு 11 ஆவர்த்தி ஜபம் செய்தால் 14641 ருத்ரஜபம் ஆகும். இது இரண்டும் ஒரே நாளில் செய்யக்கூடியதன்று.

பிராம்மணர்களுடைய கணக்கிற்குத் தக்கவாறு நாட்களை அமைத்துக் கொண்டு ஜபத்தை பூர்த்திசெய்து பிறகு கலசபூஜை செய்வது ஒருவகை. கலசங்களை வைத்து ஜபம் முடியும் நாள் வரை ஒவ்வொரு நாளும் கலசபூஜை செய்வது (ஜபம்முடியும் வரை) மற்றொரு முறை. மஹா ருத்ரத்திற்கு 108 கலசங்கள், அதிருத்ரத்திற்கு 1008 கலசங்கள் என கணக்கில் வைக்க வேண்டும். இதுதான் ஜபத்தின் வழிமுறை.

ஹோமம்

ஜபத்தில் பத்துபங்கு ஹோமம் செய்ய வேண்டும் என்பது சாஸ்திர விதி. இதன்படி பார்த்தால் 121 ருத்ர ஏகாதசினி ஜபத்தில் தசாம்சம் என்பது ஒவ்வொரு ஆவர்த்திக்கும் 48 ருத்ரஹோமங்கள் ஆகும். இதற்காக 12 பிராம்மணர்களை அமர்த்தி ஒருஆவர்த்தி 48 ருத்ர ஹோமம் செய்தால் 576 ஹோமங்கள் ஆகும். தசாம்சத்தில் மிகுதி 1-க்காக ருத்ரத்தினுடைய முதல் மந்திரத்தாலும் - கடைசி மந்திரத்தாலும் இரண்டு ஹோமம். சமகத்தினுடைய 11 அனுவாகங்களால் 11 ஹோமம் செய்தால் 576+13 = 589 ஆகுதிகள் ஆகும். 48 ஆகுதிகள் கீழ்க்கண்டவாறு:-

Digitization by Hindu-Heritage-Foundation of America, HFA, USA

1. नमस्ते रुद्रमन्यव इति

முதல் அனுவாகத்தின் 15 மந்திரங்களால் ஹோமங்கள் 15

2. नमो हिरण्यबाहवे

என்னும் அனுவாகம் ஆரம்பித்து 8

அனுவாகங்களால் ஹோமங்கள் 8

3. द्रापे अन्धसस्पते

என்னும் அனுவாகத்திலுள்ள 12 மந்திரங்களால் ஹோமங்கள் 12

4. सहस्राणि

என்கிற அனுவாகத்தின் 13 மந்திரங்களால் ஹோமங்கள் 13

ஆக மொத்தம் 48

இது மந்திர மஹார்ணவத்தில் ருத்ரஹோம விபாகத்தில் 48 பிரிவை ஒட்டியதாகும். இன்னும்பல பிரிவுகள் கூறப்பட்டுள்ளன. நம் கணக்கிற்கு ஏற்ற பிரிவு இதுதான். இதே போல் மஹாருத்ரத்திலும் அதிருத்ரத்திலும் தசாம்சமுறை கையாள வேண்டும்.

''வஸோர்தாரை'' என்னும் ஹோமம் சமக மந்திரத்தை 11 அனுவாகம் கூறி ஸாம மந்திரங்களை (''வைஷ்ணவம்'', ''ரௌத்ரம்'', ''ஐந்த்ரம்'', ''வைச்வரனரம்'', ''ஜேஷ்டம்'' ஆகிய ஸாமங்களை) கானம் செய்தல் வேண்டும். வாத்ய கோஷங்களையும் ஒலிக்க வேண்டும். மந்திரம் கூறி முடியும் வரை நெய்தாரை யானையின் துதிக்கையின் முனையிலுள்ள துவார அளவிற்கு தொடர்ந்து ஹோமம் செய்ய வேண்டும்.இதை யஜமானனே செய்ய வேண்டும் என்பது சாஸ்திர விதி.

''अग्नाविष्णूवाजादिभ्यो देवताभ्य इदं न मम''

என்று யஜமானன் உத்தேசத் தியாகம் சொல்ல வேண்டும்.

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

ஒரு பாண அளவு (சுமார் 5 முழம்) நீளத்திற்கு அத்தி மரத்தால் செய்யப்பட்ட ஈரமான, நேரான புரசலற்ற 'ஸ்ருவத்தை' தயார்செய்து அக்னிக்கு நேராக குண்டத்திற்கு வெளியே இரண்டு தூண்கள் நிறுத்தி அதன் நடுவில் ஆடாமல் விழாமல் கெட்டியாக வைத்து அக்னிக்கு நடுவாக நெய்தாரை விழும்படி முகத்துவாரம் வைத்ததை யஜமானன் எழுந்து நின்று கொண்டு மார்புக்கு நேராக வைத்துக் கொண்டு ஹோமம் செய்ய வேண்டும். இதுதான் வஸோர்த்தாரையின் முறை.

ஹோமம் செய்த முறைப்படி தர்ப்பணம்

48 ஆக ருத்ரத்தைப் பிரித்து பாலால் ஒரு தடவை श्रीरुद्रं तर्पयामि என்று தர்ப்பணம் செய்ய வேண்டும். சமகத்தினுடைய 11 அனுவாகங்களையும் சொல்லி 11 தர்ப்பணம் செய்ய வேண்டும். ஆக 59 தர்ப்பணங்கள் செய்ய வேண்டும்.

அர்ச்சனம்

கோடி அர்ச்சனை என்பது நாளொன்றுக்கு லட்ச அர்ச்சனை வீதம் நூறு நாட்களில் முடிக்கலாம். 101-வது நாளில் 1000 கலசம் வைத்து ஸஹஸ்ரநாமாக்களை வரிசையாகக் கூறி,

ओं ऐं ह्रीं जपस्तुत्यं रुद्रं ध्यायामि आवाहयामि।

என்று 1 கலசத்தில் ஆவாஹனம் செய்து மறுபடியும்,

ओं ऐं ह्रीं जपस्तुत्यरुद्रपत्नीं ध्यायामि आवाहयामि।

என்று ஆவாஹனம் செய்து அதே கலசத்தில் ருத்ராணியையும் ஸம்மேளனமாக ஒன்றிலேயே இரண்டையும் சேர்த்து ஆவாஹனம் செய்வதுதான் சாஸ்த்ரவிதி. இதேபோல் 1000 கலசங்களையும் பத்து பந்தியாக நூறு, நூறு கலசமாக தரையில் அரிசி போட்டு வைப்பதுதான் முறைமையாகும். 1000 கலசங்களுக்கும் ஷோடச உபசார பூஜை செய்துவிட்டு தசாம்ச ஹோமமும் ஸஹஸ்ரநாமாக்களைச் சொல்லிச் செய்ய வேண்டும். தசாம்சம் என்பது பத்துலக்ஷம் ஹோமமாகும். கணக்கிற்குத் தக்கவாறு ரித்விக்குகளை வரித்துக்கொண்டு ஐந்துநாளில் செய்து முடிக்கலாம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. THFA

அபிஷேகம்

★ (சந்தனாதிதைலம்) எண்ணை-வாசனை கலந்தது, சுமார் 100 லிட்டர் - சுகம் அளிக்கும்.

★ பஞ்சகவ்யம், பத்து லிட்டர் - தூய்மையை அளிக்கும்.

★ பால் 1000 லிட்டர் - ஆயுளை வளர்க்கும்.

தேன் 100 லிட்டர் - மகிழ்ச்சியையும், இனியகுரலையும் அளிக்கும்.

★ சர்க்கரை 100 கிலோ - திருப்தியைக் கொடுக்கும்.

★ எலுமிச்சப்பழம் 1000 - ஞானத்தை வளர்க்கும்.

★ இளநீர் 1000 - ஆனந்தத்தையும், சிவலோகத்தையும் கொடுக்கும்.

★ பஞ்சாமிர்தம் 10000 பழங்கள் - ஜெயத்தை அளிக்க வல்லது.

★ தயிர் 100 லிட்டர் - செல்வத்தை அளிக்க வல்லது.

★ கருப்பஞ்சாறு 100 லிட்டர் - பலத்தையும், ஆரோக்கியத்தையும் அளிக்க வல்லது.

★ மஞ்சள்தூள் 20 கிலோ - ராஜவச்யம்.

★ திராட்சைரசம் 20 லிட்டர் - பணத்தை வளர்க்கும்.

★ மாதுளைரசம் 20 லிட்டர் - அரசை அளிக்கும்.

★ நெய் 10 லிட்டர் - மோக்ஷத்தை அளிக்கும்.

★ அரிசி மாவு 10 லிட்டர் - கடனைப் போக்கும்.

★ நெல்லிக்கனி ஊற வைத்த நீர் 10 லிட்டர் - பித்தத்தைப் போக்கும்.

★ மற்றேனைய பழங்களின் ரசம் 10 லிட்டர் - வறட்சியை நீக்கும்.

அன்னாபிஷேகம் 11 மூட்டை - வயிற்று நோயை நீக்கி பசியை அளித்து அன்ன ஸம்ருத்தியை ஏற்படுத்தும்.

★ கங்கா ஜலம் 100 லிட்டர் - சாந்தியைக் கொடுக்கும்.

★ பன்னீரால் கரைத்த வாசனை கலந்த சந்தனக் குழம்பு 200 கிலோ - பக்தி, ஞானம், ஏற்படும்.

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

★ ஆவாஹனம் செய்த கலசாபிஷேகம் 1000 - மந்த்ர ஸித்தியைக் கொடுக்கும்.

★ விபூதி 100 லிட்டர் - செல்வத்தை அளிக்கும்.

★ சோர்ணாபிஷேகம் (சக்திக்கு தக்கவாறு) - மோட்ச சாம்ராஜ்யத்தைக் கொடுக்கும்.

நெய் அபிஷேகம் செய்தவுடன் அதே அளவுக்கு வெந்நீர் வைத்து அதைக் குளிர வைத்து அபிஷேகம் செய்ய வேண்டும். இவையாவும் சக்திக்குத் தக்கவாறு ஏற்பாடு செய்து கொண்டு செய்ய வேண்டும். ஒவ்வொரு அபிஷேகத்திற்கும் (வாசனை திரவியங்கள் கலந்த) சுத்தஜலத்தால் அபிஷேகம் செய்த பிறகு அடுத்த அபிஷேகம் துவங்க வேண்டும். ஒவ்வொரு அபிஷேகத்திற்கும் சிரஸில் வகை வகையான மலர்களை வைக்க வேண்டும். அபிஷேகம் ஆன உடன் உலர்ந்த வஸ்திரத்தினால் நன்கு துடைத்து கவசங்கள், பட்டாடைகள், ஆபரணங்கள், பலநிற மாலைகள் சாற்றுபடிசெய்து நைவேத்யம் செய்ய வேண்டும்.

இனிப்பு, புளிப்பு, உப்பு, உவர்ப்பு, கசப்பு, துவர்ப்பு ஆகிய அறுசுவையோடு கூடிய அன்னங்கள், பக்ஷணங்கள், பணியாரங்கள், கனிவர்க்கங்கள் முதலியவைகள் சக்திக்குத் தக்கவாறு நல்லமுறையில் தயாரித்து நிவேதனம் செய்து பக்தர்களுக்கு வழங்க வேண்டும். கறி, குழம்பு முதலிய வ்யஞ்ஜனங்களும் நிவேதனம் செய்ய வேண்டும்.

ஸ்ரீருத்ரமந்திரத்திற்கே சதருத்ரீயம் என்று பெயர். சதம் என்றால் 100 என்று பொருள் அல்ல, அளவு கடந்த என்று பொருள். ஆயிரக்கணக்கான ருத்ரர்கள் பற்றி தெரிவிக்கும் நூல். 101 சாகைகள் கொண்டது யஜுர் வேதம், அதில் ருத்ரம் சொல்லப்பட்டிருப்பதால் மிக உயர்ந்தது. ருத்ரநாமங்கள் பிரம்ம நாமங்கள்! இதை ஜபித்த மாத்திரத்திலேயே மோக்ஷம் கிட்டும்.

பிரம்மாவிடமிருந்து வரம்பெற்று 101 ஆண்டுகள் காயத்ரி ஜப சித்தியால் பரமசிவனை நேரில் அடைந்து அவர் மூலம் வஸுமனஸ் என்னும் அரசனுக்கு இந்த சதருத்ரீய மந்திரமானது

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அபிஷேகம்

★ (சந்தனாதிதைலம்) எண்ணை-வாசனை கலந்தது, சுமார் 100 லிட்டர் - சுகம் அளிக்கும்.

★ பஞ்சகவ்யம், பத்து லிட்டர் - தூய்மையை அளிக்கும்.

★ பால் 1000 லிட்டர் - ஆயுளை வளர்க்கும்.

தேன் 100 லிட்டர் - மகிழ்ச்சியையும், இனியகுரலையும் அளிக்கும்.

★ சர்க்கரை 100 கிலோ - திருப்தியைக் கொடுக்கும்.

★ எலுமிச்சப்பழம் 1000 - ஞானத்தை வளர்க்கும்.

★ இளநீர் 1000 - ஆனந்தத்தையும், சிவலோகத்தையும் கொடுக்கும்.

★ பஞ்சாமிர்தம் 10000 பழங்கள் - ஜெயத்தை அளிக்க வல்லது.

★ தயிர் 100 லிட்டர் - செல்வத்தை அளிக்க வல்லது.

★ கருப்பஞ்சாறு 100 லிட்டர் - பலத்தையும், ஆரோக்கியத்தையும் அளிக்க வல்லது.

★ மஞ்சள்தூள் 20 கிலோ - ராஜவச்யம்.

★ திராட்சைரசம் 20 லிட்டர் - பணத்தை வளர்க்கும்.

★ மாதுளைரசம் 20 லிட்டர் - அரசை அளிக்கும்.

★ நெய் 10 லிட்டர் - மோக்ஷத்தை அளிக்கும்.

★ அரிசி மாவு 10 லிட்டர் - கடனைப் போக்கும்.

★ நெல்லிக்கனி ஊற வைத்த நீர் 10 லிட்டர் - பித்தத்தைப் போக்கும்.

★ மற்றேனைய பழங்களின் ரசம் 10 லிட்டர் - வறட்சியை நீக்கும்.

அன்னாபிஷேகம் 11 மூட்டை - வயிற்று நோயை நீக்கி பசியை அளித்து அன்ன ஸம்ருத்தியை ஏற்படுத்தும்.

★ கங்கா ஜலம் 100 லிட்டர் - சாந்தியைக் கொடுக்கும்.

★ பன்னீரால் கரைத்த வாசனை கலந்த சந்தனக் குழம்பு 200 கிலோ - பக்தி, ஞானம், ஏற்படும்.

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

★ ஆவாஹனம் செய்த கலசாபிஷேகம் 1000 - மந்த்ர ஸித்தியைக் கொடுக்கும்.

★ விபூதி 100 லிட்டர் - செல்வத்தை அளிக்கும்.

★ சொர்ணாபிஷேகம் (சக்திக்கு தக்கவாறு) - மோட்ச சாம்ராஜ்யத்தைக் கொடுக்கும்.

நெய் அபிஷேகம் செய்தவுடன் அதே அளவுக்கு வெந்நீர் வைத்து அதைக் குளிர வைத்து அபிஷேகம் செய்ய வேண்டும். இவையாவும் சக்திக்குத் தக்கவாறு ஏற்பாடு செய்து கொண்டு செய்ய வேண்டும். ஒவ்வொரு அபிஷேகத்திற்கும் (வாசனை திரவியங்கள் கலந்த) சுத்தஜலத்தால் அபிஷேகம் செய்த பிறகு அடுத்த அபிஷேகம் துவங்க வேண்டும். ஒவ்வொரு அபிஷேகத்திற்கும் சிரஸில் வகை வகையான மலர்களை வைக்க வேண்டும். அபிஷேகம் ஆன உடன் உலர்ந்த வஸ்திரத்தினால் நன்கு துடைத்து கவசங்கள், பட்டாடைகள், ஆபரணங்கள், பலநிற மாலைகள் சாற்றுபடிசெய்து நைவேத்யம் செய்ய வேண்டும்.

இனிப்பு, புளிப்பு, உப்பு, உவர்ப்பு, கசப்பு, துவர்ப்பு ஆகிய அறுசுவையோடு கூடிய அன்னங்கள், பக்ஷணங்கள், பணியாரங்கள், கனிவர்க்கங்கள் முதலியவைகள் சக்திக்குத் தக்கவாறு நல்லமுறையில் தயாரித்து நிவேதனம் செய்து பக்தர்களுக்கு வழங்க வேண்டும். கறி, குழம்பு முதலிய வ்யஞ்ஜனங்களும் நிவேதனம் செய்ய வேண்டும்.

ஸ்ரீருத்ரமந்திரத்திற்கே சதருத்ரீயம் என்று பெயர். சதம் என்றால் 100 என்று பொருள் அல்ல, அளவு கடந்த என்று பொருள். ஆயிரக்கணக்கான ருத்ரர்கள் பற்றி தெரிவிக்கும் நூல். 101 சாகைகள் கொண்டது யஜுர் வேதம், அதில் ருத்ரம் சொல்லப்பட்டிருப்பதால் மிக உயர்ந்தது. ருத்ரநாமங்கள் பிரம்ம நாமங்கள்! இதை ஜபித்த மாத்திரத்திலேயே மோக்ஷம் கிட்டும்.

பிரம்மாவிடமிருந்து வரம்பெற்று 101 ஆண்டுகள் காயத்ரி ஜப சித்தியால் பரமசிவனை நேரில் அடைந்து அவர் மூலம் வஸுமனஸ் என்னும் அரசனுக்கு இந்த சதருத்ரீய மந்திரமானது

Digitization by Hindu-Heritage-Foundation (HHF)

உபதேசம் செய்யப்பட்டது. எனவே எல்லா வேதங்களுக்கும் சிறப்பாக விளங்குவது.

உபாசனைகளில் அவிமுக்த உபாசனம் சிறந்தது. ஆசிரமங்களுள் சந்யாசம் சிறந்தது. அதே போல் ஜபம் செய்பவைகளுள் ருத்ரம் சிறந்தது. காசியில் ருத்ரர் தான் கடைசி காலத்தில் தாரகப்பிரம்மத்தை உபதேசம் செய்கிறார் என்று கூறப் பட்டிருப்பதாலும் மிகச் சிறந்தது. ''சதருத்ரீயத்தை எவன் ஜபம் செய்கிறானோ அவனுக்கு எல்லா பாபங்களும் நீங்குகின்றன'' என்று கைவல்யோபநிஷத் கூறுகிறது.

ஸ்ரீருத்ர ஜபத்தினாலேயே எல்லா தேவதைகளும் சந்தோஷமடைகின்றனர் என்று சூதஸம்ஹிதை விளக்குகின்றது. கீழே ருத்ர மந்திர ரிஷிந்யாஸங்கள் கூறிய இடத்தில் சொல்லப் பட்டது போல் 'அக்னிஹோத்ரம்' முதல் 1000 வருஷங்கள் தொடர்ந்து செய்யும் 'சதகிருது' என்னும் யாகங்களாகவே இந்த ருத்ரம் விளங்குகிறது. எனவே மிகமிகச் சிறந்தது என்று பிரம்மோத்தர கண்டத்தில் தெளிவுறக் கூறப்பட்டுள்ளது. மற்றும் கூர்மமஹாபுராணம், லிங்கபுராணம், மஹாபாரதம் முதலிய புராண இதிஹாசங்களிலும் தெளிவுறக் கூறப்பட்டுள்ளது.

தக்ஷிணை

இந்த சிறந்த ருத்ரத்தைக் கொண்ட ருத்ர ஏகாதசினி கர்மா செய்பவர்கள் கீழே கூறியபடி 12 ரித்விக்குகளுக்கு யாகத்தில் பிரிக்கப்பட்டுள்ள தக்ஷிணை போல் கொடுக்கவேண்டும். யாகத்தில் 16 ரித்விக்குகளுக்கு 100 கோ(பசு) கன்றுடன் தக்ஷிணை கொடுக்க வேண்டும் என்று கூறப்பட்டது. அதை எவ்வாறு பிரித்துக் கொடுப்பது என்கிற வழிமுறையும், கூறப் பட்டிருக்கிறது.

அதில் முதல் 4 பேர்களுக்கு ''அர்த்தி'', என்றும், 2-வது நான்கு பேர்களுக்கு ''த்வயர்தி'' என்றும், மூன்றாவது நான்கு பேர்களுக்கு ''த்ரயர்தி'' என்றும், நான்காவது 4 பேர்களுக்கு ''பாதி'' என்றும் பெயர். அர்த்திகளுக்கு 48 கோ, அதில் பாதி 24 த்வயர்த்திகளுக்கு, த்ரயர்திகளுக்கு அர்த்திகளுக்கு

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

உள்ளத்தில் மூன்றில் ஒரு பங்கு 16, பாதிகளுக்கு அர்த்தியினது நான்கில் ஒரு பங்கு 12 ஆக 100 கோ பங்கிட்டு கொடுக்கப்பட்டது.

அதே போல் இங்கு ப்ரதான ஆசார்யருக்கு 480 ரூபாய் அதற்கடுத்த மூன்று பேர்களுக்கு (80 X 3) 240. அடுத்து நால்வருக்கு (40 X 4) 160 அடுத்த நால்வருக்கு (30 X 4) 120 ஆக 1000 கணக்கிடப்பட்டுவிட்டது. இது உதாரணத்துக்காக கொடுக்கப்பட்டுள்ளது. அவரவர்களின் பொருளாதார வசதியையும் மனோபாவத்தையும் கருதி கூட்டியும் குறைத்தும் கொடுப்பது பற்றி தவறாகாது. கர்மாவில் நம்பிக்கையும், மிகப்பற்றுதலுமே மிக முக்கியமானது.

ஸ்ரீருத்ரஸஹஸ்ரநாம ஸ்தோத்ர ந்யாஸ த்யானத்தில் 1000 கண்கள், 1000 கைகள் கூறப்பட்டிருக்கிறதே தவிர முகங்கள் கூறப்படவில்லை. அதைத் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியமாகும். சிவபிரானுக்கு ஸத்யோஜாதம், தத்புருஷம், அகோரம், வாமதேவம், ஈசானம் என 5 முகங்கள் உள்ளன. அவை ஒவ்வொன்றும் 100 ருத்ரர்களாக கணக்கிட்டு 500 முகங்கள் ஏற்பட்டு விடுகின்றன. இதேபோல் பராசக்திக்கும், ஆண், பெண், பன்றி, சிங்கம், யானை என்று ஐந்து முகங்கள் கூறப்பட்டுள்ளன. இவை ஒவ்வொன்றும் நூறாகின்றன. ஆக 500 முகம் கணக்காகிறது. இதைக் கருதிதான் இந்திராக்ஷி த்யானத்தில் 1000 கண்கள் என்று கூறப்பட்டிருக்கிறது. இந்திராக்ஷி என்கிற பெயரே இந்திரனுடைய கண்கள் போல் 1000 கண்களை உடையவள் என்கிற பொருளை தெரிவிக்கிறது. எனவே ருத்ராணிக்கு 500 முகம், ருத்ரனுக்கு 500 முகம் ஆக 1000 முகம் கொண்டவர் ருத்ரர் என்று,

सहस्राणि सहस्रशो ये रुद्रा अधिभूम्याम्

என்கிற மந்திரத்தில் தெளிவாகக் கூறியிருப்பது அறியத்தக்கது.

இத்தகைய மஹாபெருமை வாய்ந்த ஸ்ரீருத்ரத்தை ஸ்வரத்துடன் கூறப்பயிற்சி பெறாதவர்கள் இந்த ஸஹஸ்ர

Digitization by Hindu-Heritage-Foundation of America: HBFA (USA)

நாமத்தைப் பாராயணம் செய்வதாலும் அர்ச்சனை செய்வதாலும் அதன் பலனைப் பெறுவது திண்ணம்.

வெறும் நாமாவை மட்டும் சொல்லிப் பயன் இல்லை. அதன் பொருள் அறிந்து கூறி வழிபாடு செய்வதுதான் சாஸ்த்ர முறைமையும் பயன்தர வல்லதுமாகும். எனவே தான் பதஞ்ஜலி மஹாமுனிவர் தனது மஹாபாஷ்யத்தில், *'வெறும் வேதம் மட்டும் படித்துப் பொருள் அறியாதிருப்பவனை சுமை தாங்கும் தூண்' என்றும், 'அவனால் செய்யப்படும் வேள்வி முதலியவை சாம்பலில் ஊற்றப்படும் நெய்க்கு சமமாகும்'* என்றும் இகழுகின்றார். எனவே பொருள் உணர்ந்து படித்துப் பயனுறவே இப்புத்தகம் தமிழுரையுடன் வெளியிடப்படுகிறது.

அதில் ஓம் என்று ஆரம்பிக்கும் நாமாக்கள்	101
'ந' என்னும் எழுத்தில் ஆரம்பிக்கும் நாமாக்கள்	100
'ம' என்னும் எழுத்தில் ஆரம்பிக்கும் நாமாக்கள்	105
'ப' என்னும் எழுத்தில் ஆரம்பிக்கும் நாமாக்கள்	94
'க' என்னும் எழுத்தில் ஆரம்பிக்கும் நாமாக்கள்	100
'வ' என்னும் எழுத்தில் ஆரம்பிக்கும் நாமாக்கள்	100
'த' என்னும் எழுத்தில் ஆரம்பிக்கும் நாமாக்கள்	98
'ர' என்னும் எழுத்தில் ஆரம்பிக்கும் நாமாக்கள்	100
'த' என்னும் எழுத்தில் ஆரம்பிக்கும் நாமாக்கள்	99
'ய' என்னும் எழுத்தில் ஆரம்பிக்கும் நாமாக்கள்	103
	1000

சிவபிரானுடைய ஸஹஸ்ரநாமங்கள் எங்கெங்கு கூறப்படுகின்றனவோ அவை யாவற்றையும் சிவஸஹஸ்ரநாம மணியாரமாகத் தயாரிக்க ஆரம்பித்த மாலையில் இந்த ஸ்ரீருத்ர ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரம் 3-வது மணியாக அமைந்தது, ஈசனின் திருவுள்ளமே என்பது திண்ணம். மூர்த்திகள் மூன்று, பிரம்மன், திருமால், ருத்ரன் என்று இந்த 3-வது மணி ருத்ரஸ்தானத்தில் ருத்ரனாகவே அமைந்திருப்பது போற்றத்தக்கது.

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

இத்தகைய பெரும்பணியில் ஈடுபட்டுள்ள பிரம்மஸ்ரீ சென்னை 'ஆங்கீரஸ' வேங்கடேச சர்மா அவர்கள் இந்த ஹாரத்தை பூர்த்தியாக்கி சாற்றும் நாளை பகவான் அருள்புரிய ஆசி வழங்குகின்றோம். ஆங்கீரஸ சர்மா அவர்கள் தன்னலம் கருதாது பிறர் நலனையே கருத்தில் கொண்டு ஆங்காங்கு ஆலயங்களிலும், மடங்களிலும் தனியார் ஸ்தலங்களிலும் சிவக்ஞானத்தை பரப்பும் பெரும் நோக்கோடு சிவபுராண சொற் பொழிவுகள் நிகழ்த்தி பக்தர்களை மகிழ்வித்து வருகிறார்கள்.

பிறர்உதவியை எதிர்பாராது உபகாரம் செய்பவனுக்குத் தான் ''ஸுஹ்ருத்'' என்று பெயர் என்று ஆதிசங்கர பகவத் பாதாள் கீதா பாஷ்யத்தில் ''ஸுஹ்ருத்'' பதத்திற்கு விவரணம் செய்துள்ளார்கள். அதற்கு எடுத்துக்காட்டாக சர்மா அவர்கள் விளங்குவது இக்காலத்தில் பெரும் ஆச்சரியமே! சொற்பொழி வையும் பூஜையாகவே கருதி நடத்தி வருவதால் அதற்கு மலராக ஆண்டுதோறும் ஸ்ரீசங்கரஜயந்தி ஞாபகார்த்தமாக வெளியிட்டு வருகிறார்கள். இவ்வாண்டில் இந்த ஸ்ரீருத்ர ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரம் நாமாவளியுடனும், பதவுரையுடனும் வெளிவருகிறது.

வடமொழியில் பரிச்சயம் இல்லாதவர்களுக்கும் பயன்படத் தமிழிலும் எழுதப்பட்டுள்ளது. ஸம்ஸ்கிருத பழக்கமில்லாத வர்கள் பாஷைப் பயிற்சி பெறாவிடினும் அக்ஷரப் பயிற்சியாவது பெற்று ஸம்ஸ்கிருதத்திலேயே படிப்பதுதான் மிகச்சிறந்தது. அப்படிப் பயிற்சி பெற முடியாதவர்கள் ஸம்ஸ்கிருத பயிற்சி பெற்றவரைக் கொண்டு அவர் வாயிலாக சரியான உச்சரிப்போடு அப்யாஸம் பெற்றுவிட்டால் தமிழ் எழுத்திலேயே திறம்படப்படித்து, (பிழையின்றி) ஸம்ஸ்கிருத அறிஞர்களையும் வியப்பில் ஆழ்த்த முடியும் என்பது உறுதி.

அது தவிர உச்சரிப்பை சரியாகச் சொன்னால் தான் பகவத்ப்ரீதி ஏற்படும். ஏனெனில் வடமொழியில் க,ச,ட, த,ப, என்னும் எழுத்துகள் நான்கு பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளன. எனவே ''கண்டம்'' என்று தமிழில் வடமொழியை எழுதுவதால் அதன்பொருள் சுலபமாகஅறிந்து கொள்ள இயலாது. 'க'

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வரிசையின் முதலாவதாக வைத்துக் கொண்டால் ''கழுத்து'' என்று அர்த்தம். இரண்டாவதாக வைத்துக் கொண்டால் ''துண்டு'' என்று அர்த்தம். மூன்றாவதாக வைத்துக் கொண்டால் '' கன்னம்' என்பதாக பொருள். நான்காவதாக வைத்துக் கொண்டால் ''மணி'' என்று பொருள்.

எந்தப்பொருளை இந்தச்சொல் கூறுகிறது என்பது அறிஞர்களுக்கும் சந்தேகத்தை உண்டுபண்ணிவிடுகிறது. ஸம்ஸ்கிருத எழுத்திலேயே எழுதினாலும் சந்தர்ப்பத்தைப் பொறுத்து அர்த்தம் கொள்ள வேண்டியது முக்கியம். ஏனெனில் ஒரே சொல்லிற்கு பலபொருள் உண்டு. சொல்லும் சந்தர்ப் பத்தைப் பொறுத்து அர்த்தம் கொள்ள வேண்டியது முக்கியம்.

இதற்கு எடுத்துக்காட்டாக ஒருசிறு கதையைப் பார்ப்போம். அந்தக்காலத்தில் ஸம்ஸ்கிருதம் பேசும் மொழியாக இருந்திருக்கிறது. ஒரு தனவான் வெளியூர் பயணம் மேற்கொண்டு சாப்பிட்டுக் கொண்டு இருக்கும் சந்தர்ப்பத்தில் ''ஸைந்தவமானய'' என்று அரைகுறை பயிற்சியுள்ள தனது பணியாளனிடம் கூற அவன் அவசரமாகச் சென்று குதிரை லாயத்திலிருந்து உயர்ஜாதிக் குதிரையைக் கொண்டுவந்து நிறுத்தினான். அதைப்பார்த்து வியப்படைந்த செல்வந்தர். ''தம்பி, நான் குதிரையைக் கொண்டுவரச் சொல்லவில்லை; சாப்பாட்டில் உப்பு குறைவாக இருக்கிறது, அதைக்கொண்டு வரச்சொன்னேன்'' என்று கூறி உப்பைப் பெற்று சாப்பாட்டை முடித்துக்கொண்டு தாம்பூலம் தரித்துக்கொண்டு, உடைகளை மாற்றிக்கொண்டு பயணத்திற்குத் தயாராக வாசலில் வந்து பணியாளனை நோக்கி ''ஸைந்தவமானய'' என்று மீண்டும் கூறினார். இதைக் கேட்டு முன்தான் தவறு செய்து விட்டோம் என்று உப்பைக் கூடை நிறைய வைத்து யஜமானர் முன்கொண்டு வைக்கவே யஜமானர் அவனைப் பார்த்து ''நான் பயணத்திற்கு தயாராகக் கிளம்ப குதிரை தான் தேவை. எனவே அதைக் கொண்டு நிறுத்து!'' என்று கூறினார்.

ஆகவே ஸம்ஸ்கிருத சொல்லிற்கு ஸம்ஸ்கிருதத்திலேயே வடிவம் கொடுத்தாலும் பொருள் கொள்ளும்பொழுது

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

சந்தர்ப்பத்தை அவசியம் கருத்தில் கொள்ள வேண்டும். இல்லாவிடில் இகழ்ச்சிக்கு இடமாகிவிடும்.

ஸ்ரீ சர்மா அவர்கள் சிவத்தையே (மங்கலத்தையே) முழுமுயற்சியோடு சிவஜெயம், மஹாதேவஜயம், சிவமங்கலம், சிவஸ்மிருதி என்று விஷ்ணுபதம் கலக்காத சிவபதத்தையே பயன்படுத்தியும் எழுதியும் வருகிறார்கள். ஆனால் இவருடைய பெயர் வேங்கடேச என்று வேங்கடாசலபதியின் பெயராக உள்ளதே என்று தயங்க வேண்டாம். வேங்கடேச என்றால் திருவேங்கடம் என்னும் ஏழுமலைகளுக்கும் தலைவர் என்று பொருள். தலைவர் யார்? என்று கேட்பின் குன்றுதோறாடும் சாக்ஷாத் முருகனே! என்பதில் ஐயமில்லை. ஆகவேதான் வேங்கடேச நாமாவளியில் "கார்த்திகேய வபுர்தாரிணே நம:" என்று ஒரு நாமம் இன்றும் இருக்கிறது.

திருப்பதியில் திருவாதிரை தோறும் வில்வார்ச்சனை நடப்பதும் அதற்கொரு சான்றாகும். எனவே சுப்ரமண்யருடைய பெயர்தான் சர்மா அவர்களுக்கு அமைந்துள்ளது. இதைக் கொண்டு தான் உலக வழக்கிலும் வேங்கட சுப்ரமண்யம், சோம சுப்ரமண்யம், சேது சுப்ரமண்யம், ராம சுப்ரமண்யம் என்று பெயர்கள் வழக்கில் உள்ளது கவனிக்கத்தக்கது.

ஸ்ரீசர்மாவைப் போன்று 1881 ஆம் ஆண்டில் ஸ்ரீ நீலகண்ட யதீந்திரர் என்பவரால் திருநெல்வேலியில் இருந்து "யதிதர்ம ப்ரபோதம்" என்னும் ஸந்யாஸ ஆசிரம விதிகளை தெளிவுறக் கூறும் நூல் ஒன்று இயற்றப்பட்டு "முத்தையர்" என்பவரால் க்ரந்தலிபியில் வெளியிடப்பட்டது. 1971-ல் முன்னுரை யுடனும், விஷயஸூசியுடனும் யதிதர்மப்பிரபோதம் தேவநாகர லிபியில் நமது பூர்வாச்ரம தந்தையும், ஆசார்யருமான பூஜ்யஸ்ரீ ஸோமசேகரேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகளால் வெளியிடப்பட்டது.

அதில் நாம் முக்கியமாகக் கவனித்து தெரிந்துகொள்ள வேண்டியதை சிறிது பார்ப்போம். ஸந்நியாஸ ஆசிரமம் ஏற்றுக் கொள்ளும் முறை தொடங்கி அதற்கு உரிய சிராத்தத்தையும், சைவ சிராத்தமாக திருமணம் செய்து வியாசபூஜை முதலிய வற்றையும், சிவநாமாக்களையே கொண்டு செய்யும் வழிமுறை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA (USA)

யையும் ஸந்யாஸியின் நிர்யாணத்திற்குப் பிறகு செய்ய வேண்டிய சடங்குகளை சிவபரமாகவும் ஏற்படுத்தி மிக விரிவாக சிவோத்கர்ஷம் பிரகாசிக்க ஏற்பட்டுள்ளது இந்த நூல் ஒன்றுதான் என்பதாக உறுதியாகக் கூறலாம். மற்றேனைய யதிதர்ம நூல்கள் விஷ்ணுபரமாகவே ஸ்மார்த்தர்களுக்கு அமைந்துள்ளது. இதைக்கருதியே நமது தந்தையார் இதை வெளியிட்டு சில ஆண்டுகள் கழித்து இதன்படியே ஸந்யாஸ ஸ்வீகாரம் ஏற்றுக் கொண்டார்கள். அவரது நிர்யாணத்திற்கு பிறகு செய்ய வேண்டிய விதிகளை இதைக்கொண்டே செய்து முடித்தது குறிப்பிடத்தக்கது.

சிவோத்கர்ஷ அறப்பணியில் ஈடுபட்டிருக்கும் திருவாளர். சர்மா அவர்கள் இப்பணியில் நமக்கும் ஒருபங்கு அளித்தது பற்றி மனமார்ந்த சந்தோஷத்தை அன்னாருக்குத் தெரிவிப்ப துடன் அன்னார் இக்கைங்கர்யத்தை திறம்படச் செய்யும் மனஉறுதியையும், உடலுறுதியையும், நீண்ட ஆயுளையும், ஸ்ரீ சிவகாமசுந்தரி ஸமேத ஸ்ரீநடராஜராஜமூர்த்தி அருள்பாலித்து வழங்கிட ஆசிபல வழங்குகின்றோம்.

இதை சிவசந்நிதிகளில் பாராயணம் செய்பவர்களுக்கும், சிவமூர்த்தங்களுக்கும் இதைக்கொண்டு வழிபாடு செய்பவர் களுக்கும் மஹாருத்ரன் சகல ஸௌபாக்கியங்களையும், க்ஷேம லாபங்களையும் மங்கல பரம்பரைகளையும், ஸர்வ மனோரதப் பூர்த்தியையும் அளித்திட ஆசிபல கூறுகின்றோம்.

ஸ்ரீ ருத்ரனுடைய கண்களிலிருந்து வெள்ளி உண்டாகியது என்பது வேதப்பிரசித்தம்; இந்த ஸ்ரீசங்கரஜயந்தி மலர் வெள்ளிவிழா மலராக வெளிவரும் விவரமறிந்து மகிழ்கிறோம். வெள்ளிக்கு மூலகாரணமான ருத்ரனது ஸஹஸ்ரநாமம் இம்மலரில் வெளியாவது மிகமிகப்பொருத்தமாக அமைந் துள்ளது.

ஸர்வம் சிவமயம் ஜகத்

சிவம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உ

சிவமயம்

ஸ்ரீமஹாதேவஜயம்

।। श्रीरुद्रसहस्रनाम स्तोत्रम् ।।

।। पूर्वपीठिका ।।

ஸ்ரீருத்ர ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரம்

பூர்வ பீடிகா + பூர்வபீடிகையின் பொருள் விளக்கம்

1. कैलासाचलशृंगाग्रे रत्नसिंहासने स्थितम् ।
पार्वत्यासहितं देवं शिवं वेदान्तवर्णितम् ।।

1. *கைலாஸாசல ச்ருங்காக்ரே ரத்ன ஸிம்ஹாஸநே ஸ்திதம் ।*
பார்வத்யா ஸஹிதம் தேவம் சிவம் வேதாந்த வர்ணிதம் ।।

1. (பொ.வி.):- வெள்ளியங்கிரியான ஸ்ரீகைலாசமலையின் உச்சியின் நடுவில் ரத்தினங்களால் இழைக்கப்பட்ட சிம்மாசனத்தில் அமர்ந்தவரும், வேதாந்தங்களில் சிறப்புறப் புகழப்பட்டவரும் பார்வதிதேவியுடன் கூடியவருமான சிவபெருமானை,

2. कदाचिद्भगवान्विष्णुः आगत्य परया मुदा ।
सजलजलदनीलः दर्शितोदारशीलः ।।

2. *கதாசித் பகவான் விஷ்ணு; ஆகத்ய பரயா முதா ।*
ஸஜல ஜலதநீல; தர்சிதோதார சீலः ।।

3. करतलधृतशैलः वेणुवाद्ये रसालः ।
व्रजजनकुलपालः कामिनीकेलिलोलः ।।

3. *கரதல த்ருத சைல; வேணுவாத்யே ரஸாலः ।*
வ்ரஜஜனகுலபால; காமிநீ கேலிலோலः ।।

4. तरुणतुलसिमालः गोपगोपीविलोलः।
तुष्टाव विविधैस्स्तोत्रै : भगवन्तमुमापतिम् ।।

4. *தருண துலஸிமால; கோபகோபீ விலோலः ।*
துஷ்டாவ விவிதைஸ்ஸ்தோத்ரை; பகவந்தமுமாபதிம் ।।

Digitization by Hindu-Heritage-Foundation of America (HHFA/USA)

5. महादेव! महादेव! महादेव! दयानिधे! ।
भवानेव भवानेव भवानेव गतिर्मम ।।

5. *மஹாதேவ மஹாதேவ மஹாதேவ தயாநிதே ।*
பவானேவ பவானேவ பவானேவ கதிர்மம ।।

2-5 **(பொ.வி.):-** புதிய நீருண்ட மேகம் போன்ற கரிய நீல நிறங்கொண்டவர், பக்தர்களிடம் தாராள மனப்பான்மையைக் காட்டியவர், கோவர்த்தன கிரியைக் குடையாகப் பிடித்து கோபர்களுக்கு உதவியவர், புல்லாங்குழல் ஊதுவதில் மிக ஆசை கொண்டவர், இடையர்குல மக்களைக் காப்பதில் ஆர்வங்கொண்டவர், கோபர்களிடத்தும் கோபிகாஸ்த்ரீ களிடத்தும் மிக ஆசை கொண்டவர், பசுமையான துளசி மாலையை அணிந்தவர், பெண்களுடன் விளையாடுவதில் ஈடுபாடு கொண்டவர் (ஆகிய இத்தகைய) பகவான் விஷ்ணு வானவர் ஒருசமயம் மிக்க சந்தோஷத்துடன் வந்தடைந்து, உமாபதியான பகவான் சிவபெருமானைப் பலவிதமான தோத்திரங்களால் துதித்தார். **மஹாதேவ, மஹாதேவ, மஹாதேவ, தயாநிதியே** என விளித்து, ''தேவரீரே எனக்குக் கதி'' என்று மும்முறை கூறி,

6. स्रष्टारोऽपि प्रजानां प्रबलभवभयाद्यं नमस्यन्ति देवाः ।
यश्चित्ते संप्रविष्टोप्यवहितमनसां ध्यानयुक्तात्मनां च ।।

6. *ச்ரஷ்டாரோऽ பிப்ரஜானாம் ப்ரபல பவபயாத்யம்*
நமஸ்யந்தி தேவாः।
யச்சித்தே ஸம்ப்ரவிஷ்டோப்யவஹித மநஸாம் த்யான
யுக்தாத்மனாம் ச।।

7. लोकानामादिदेवः स जयतु भगवान्श्रीभवानीसमेतः।
बिभ्राणः सोमलेखामहिवलयवरं गांगचन्द्रौ कपालम् ।।

7. *லோகானாமாதிதேவ: ஸஜயது பகவான் ஸ்ரீ பவானீஸமேத: ।*
பிப்ராண;ஸோமலேகா மஹிவலயவரம் காங்கசந்த்ரௌ கபாலம் ।।

6-7.**(பொ.வி.):-** தேவர்கள் மக்களைப் படைக்கும் திறன் படைத்தவர்களாய் இருப்பினும் பெரிய ஸம்ஸார

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பயத்தினால் எவரை வணங்குகின்றனரோ, தியானத்தோடு கூடிய உள்ளத்தை உடையவர்களும் ஊக்கத்துடன் கூடிய உள்ளத்தை உடைய மாமுனிவர்களின் உள்ளத்தில் எவர் எப்பொழுதும் இருப்பவரோ, உலகங்களுக்கெல்லாம் தலையான கடவுளாக விளங்குபவர் எவரோ, எவர் ஷட்குண பரிபூர்ணராக பகவான் என்று விளங்குபவரோ, எவர் பவாநிதேவியுடன் சேர்ந்தே விளங்குபவரோ, சிரத்தில் பிறைச்சந்திரனையும் கங்கையையும் கைகளில் பாம்பு களையே அணியாகவும் கால்களில் வேத மந்திரங் களையே சதங்கையாகவும், கையினில் மண்டையோட் டினையும் வைத்திருப்பவர் எவரோ, அந்த மஹாதேவர் வெற்றியோடு விளங்கட்டும்.

8. नमश्शिवाय सांबाय सगणाय ससूनवे।
सनन्दिने सगङ्गाय सवृषाय नमो नमः ।। 8

8. *நம: சிவாய ஸாம்பாய ஸகணாய ஸஸூநவே ।*
ஸநந்தினே ஸகங்காய ஸவ்ருஷாய நமோ நம: ।। 8

8. (பொ.வி.):- அம்பிகையோடு கூடியவரும், பூதப்ரேத பிசாசு கணங்களோடு கூடியவரும், மைந்தர்களோடு கூடியவரும் நந்தி கங்கை காளை இவற்றுடன் கூடியவருமான சிவபெருமானுக்கு மும்முறை வணக்கம்.

9. स्वर्णासनाय सौम्याय शक्तिशूलधराय च ।
नमो दिक्चर्मवस्त्राय ईशानाय नमो नमः ।। 9

9. *ஸ்வர்ணாஸநாய ஸௌம்யாய சக்தி சூல தராய ச ।*
நமோ திக்சர்மவஸ்த்ராய ஈசானாய நமோ நம: ।। 9

9. (பொ.வி.):- தங்கமயமான, பீடத்தில் அமர்ந்தவரும், காண்பதற்கு கண்கொள்ளாக் காட்சியாக விளங்குபவரும், வேல் சூலம் ஆகியவற்றை ஏந்தியவரும், தோலையும் திசைகளையும் ஆடையாகக் கொண்டவருமான, (உலகத் தலைவருமாகிய) ஈசானருக்கு மும்முறை வணக்கம்.

Digitization by Hindu-Heritage-Foundation, America. Pranava Peetham

10. ब्रह्मणेब्रह्मदेहाय नमस्तत्पुरुषाय ते ।
नमोन्धकविनाशाय अघोराय नमो नमः ।। 10

10. ப்ரஹ்மணே ப்ரஹ்மதேஹாய நமஸ்தத்புருஷாய தே ।
நமோந்தக விநாசாய அகோராய நமோ நம: ।।

11. (பொ.வி.):- பரப்ரம்ம ஸ்வரூபமாக விளங்குபவரும், நான்முகனாகத் தோன்றுபவரும், பெருமைவாய்ந்த (புருஷ தெய்வமாக விளங்கும்) தத்புருஷருக்கு வணக்கம். அந்தகாஸுரனை வென்ற (பயங்கர உருவத்தோடுகூடிய) அகோரருக்கு மும்முறை வணக்கம்.

11. रुद्राय पंचवक्त्राय वामदेवाय ते नमः ।
सर्वरोगविनाशाय सद्योजाताय ते नमः ।। 11

11. ருத்ராய பஞ்சவக்த்ராய வாமதேவாய தே நம: ।
ஸர்வரோக விநாசாய ஸத்யோஜாதாய தே நம: ।। 11

11. (பொ.வி.):- துக்கத்தையும் அதன் காரணமான அக்ஞானத்தையும் போக்கி மக்களைக் காப்பதால் ருத்ரர் என்று பெயர் பெற்றவரும், ஐந்துமுகங்களோடு கூடிய வரும், அழகான தெய்வமுமான வாமதேவருக்கு வணக்கம். ஸமஸ்தமான பிணிகளையும் போக்குபவரும், மந்த்ரோச்சாடனம் செய்த உடனேயே தோன்றுபவருமான, ஸத்யோஜாதருக்கு வணக்கம்.

12. गिरिशाय सुदेहाय सुन्दराय नमो नमः ।
भीमायोग्रस्वरूपाय विजयाय नमो नमः ।।

12. கிரிசாய ஸுதேஹாய ஸுந்தராய நமோ நம: ।
பீமாயோக்ர ஸ்வரூபாய விஜயாய நமோ நம: ।।

12. (பொ.வி.):- திருக்கயிலாயமலையில் வசிப்பவரும், அழகிய உடற்கட்டு வாய்ந்தவருமாகிய கல்யாண சுந்தரருக்கு இருமுறை வணக்கம். எதிரிகளுக்கு மிகப்பயங்கரமான தோற்றத்துடன் காட்சியளிப்பவரும், எப்பொழுதும் வெற்றியுடன் விளங்குபவருமான சிவபெருமானுக்கு இருமுறை வணக்கம்.

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

13. सुरासुराधिपतये अनन्ताय नमो नमः।
सूक्ष्माय वह्निहस्ताय वरखट्वांगधारिणे ।।

13. ஸுராஸுராதிபதயே அனந்தாய நமோ நம: ।
ஸூக்ஷ்மாய வஹ்னிஹஸ்தாய வரகட்வாங்கதாரிணே ।।

13. (பொ.வி.):- தேவர்களுக்கும் அஸுரர்களுக்கும் தலைவரும், எந்நாளும் அழிவற்றவர் என்பதால் அனந்தர் என்ற பெயர் பெற்றவருமான முழுமுதற் கடவுளுக்கு இருமுறை வணக்கம். மிக நுட்பமானவரும், நெருப்பைக் கொண்ட கரத்தினையுடையவரும், சிறந்த கட்வாங்கம் என்ற ஆயுதத்தைத் தரித்தவருமான சிவபெருமானுக்கு வணக்கம்.

14. शिवोत्तमाय भर्गाय विरूपाक्षाय ते नमः ।
शान्ताय च तमोघ्नाय एकनेत्राय ते नमः ।।
वेधसे विश्वरूपाय एकरुद्राय ते नमः ।।

14. சிவோத்தமாய பர்காய விரூபாக்ஷாய தே நம: ।
சாந்தாய ச தமோக்னாய ஏகநேத்ராய தே நம: ।।
வேதஸே விச்வரூபாய ஏகருத்ராயதே நம: ।।

14. (பொ.வி.):- உத்தமமான மங்களமூர்த்தியும், மக்களின் பாபங்களைப் போக்குபவரும், நெற்றியில் ஒரு கண் அதிகப்படியுள்ளமையால் விரூபாக்ஷர் என்ற பெயருடைய வருமான சிவபிரானுக்கு வணக்கம். சாந்த குணமுடைய வரும், அக்ஞானமென்னும் இருட்டை அழிப்பவரும், ஒற்றைப்படையான கண்களை (முக்கண்கள்) உடையவருமான சிவபிரானுக்கு வணக்கம்.

15. भक्तानुकंपिनेऽत्यर्थं नमस्तेऽस्तु त्रिमूर्तये ।
श्रीकण्ठाय नमस्तेऽस्तु रुद्राणां शतधारिणे ।।

15. பக்தானுகம்பினே ऽ த்யர்த்தம் நமஸ்தே ஸ்துऽ த்ரிமூர்த்தயே ।
ஸ்ரீ கண்டாய நமஸ்தே ऽ ஸ்து ருத்ராணாம் சததாரிணே ।।

15. (பொ.வி.):- பக்தர்களிடம் மிக்க தயவுடையவரும் மும்மூர்த்திகளாக விளங்குபவருமான சிவபிரானுக்கு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA (USA)

வணக்கம். விஷத்தை யுடைய கழுத்தை உடைமையால் ஸ்ரீகண்டர் எனப்படுபவரும் பல வடிவங்களை எடுத்தவருமான ஸ்ரீருத்ரருக்கு வணக்கம்.

16. पंचास्याय शुभास्याय नमस्तेऽस्तु शिखण्डिने ।
एवं स्तुतो महादेव प्राह गंभीरया गिरा ।।

16. பஞ்சாஸ்யாய சுபாஸ்யாய நமஸ்தேऽஸ்து சிகண்டினே ।
ஏவம் ஸ்துதோ மஹாதேவ: ப்ராஹ கம்பீரயா கிரா ।।

16. (பொ.வி.):- ஐந்து முகங்களைக் கொண்டவரும் மங்களமான முகத்தையுடையவரும், மயில்தோகையைச் சிரத்தில் சூடியதால் சிகண்டி எனப் பெயர் பெற்றவருமான சிவபிரானுக்கு வணக்கம். இவ்வாறு (மஹாவிஷ்ணுவால் நன்கு) துதிக்கப்பட்ட மஹாதேவர் கம்பீரமான குரலோடு கூறினார்.

17. किं तवेष्टं मम पुर: वदविष्णो! प्रियंकर! ।
इत्युक्त: कमलाक्षस्तु शिवं प्राह रमापति: ।।

17. கிம் தவேஷ்டம் மமபுர: வத விஷ்ணோ ப்ரியம்கர ।
இத்யுக்த: கமலாக்ஷஸ்து சிவம் ப்ராஹ ரமாபதி: ।।

17. (பொ.வி.):- ''ஹே விஷ்ணுவே! எனக்குப் பிரியத்தை உண்டாக்குபவரே! நீ விரும்பியது யாது என்பதை என் முன் கூறுவாயாக''. இங்ஙனம் கூறப்பட்ட தாமரைக் கண்ணரும் லக்ஷ்மீபதியுமான திருமால் சிவபெருமானிடம் கூறலானார்.

18. लोकानां रक्षणेतावत् नियुक्तो भवताह्यहम् ।
तद्रक्षणे यथाशक्तो भवेयं च तथा कुरु ।।

18. லோகானாம் ரக்ஷணேதாவத் நியுக்தோ பவதாஹ்யஹம் ।
தத்ரக்ஷணே யதாசக்தோ பவேயம் ச ததா குரு ।।

18. (பொ.வி.):- ''உலகத்தைக் காப்பதற்காகத் தங்களால் நான் நியமிக்கப்பட்டுள்ளேன். அதைக் காப்பாற்றுவதற்கு எவ்வாறு நான் திறமையுள்ளவனாக ஆவேனோ அவ்வாறு செய்தருள்க''.

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

19. असुराणां वधार्थाय बलं देहि वपुष्षुमे ।
रुद्रनामसहस्रं च तदर्थं वद मे प्रभो ।।

19. அஸுராணாம் வதார்த்தாய பலம் தேஹி வபுஷ்ஷுமே ।
ருத்ர நாம ஸஹஸ்ரம்ச ததர்த்தம் வத மே ப்ரபோ ।।

19. (பொ.வி.):- "அஸுரர்களை அழிப்பதற்காக என்னுடைய பல உருவங்களிலும் வலிமையைக் கொடுத்தருள்க, அதன் பொருட்டு ஸ்ரீ ருத்ரருடைய ஆயிரம் திருநாமங்களையும் அடியேனுக்கு உபதேசித்தருள்க".

20. इति संप्रार्थितस्तेन माधवेन महेश्वरः ।
प्रोवाच रुद्रनामानि तन्माहात्म्यस्य संग्रहम् ।।

20. இதி ஸம்ப்ரார்த்திதஸ்தேன மாதவனே மஹேச்வரः ।
ப்ரோவாச ருத்ர நாமானி தன்மாஹாத்ம்யஸ்ய ஸங்க்ரஹம் ।।

20. (பொ.வி.):- இவ்வாறு மாதவன் என்று பெயர் கொண்ட விஷ்ணுவினால் பிரார்த்தித்துக் கொள்ளப்பட்ட பரமசிவனார் ஸ்ரீ ருத்ரருடைய நாமங்களையும், அவருடைய மஹிமையின் சுருக்கத்தையும் கூறியருளினார்.

21. अजेकपादहिर्बुध्न्यः त्वष्टाप्रोक्तस्तृतीयगः
विश्वरूपहरश्चैव बहुरूपस्त्रियम्बकः ।।

21. அஜேகபாதஹிர்புத்ன்யः த்வஷ்டா ப்ரோக்தஸ்த்ருதீயகः ।
விச்வரூபஹரச்சைவ பஹுரூபஸ்த்ரியம்பகः ।।

22. अपराजितस्सप्तमश्च अष्टमश्च वृषाकपिः ।
शंभुः कपर्दी दशमः रैवत एकादशस्मृतः ।।

22. அபராஜிதஸ்ஸப்தமஸ்ச அஷ்டமஸ்ச வ்ருஷாகபிः
சம்புः கபர் தீ தசமः ரைவத ஏகாதச ஸ்ம்ருதः

21-22. (பொ.வி.):- "பிறப்பற்றவரும், ஏகபாத மூர்த்தியுமான **அஜேகபாதர்**, பாதாளத்தில் வாழும் ஆதிசேஷமூர்த்தியான, **அஹிர்புத்னியர்** (என்று இரண்டு) மூன்றாவதாக **த்வஷ்டா** (உலகை நாளடைவில் அழித்து அழித்து மறைப்பவர்). (நான்காவதாக) உலகம் முழுவதையும் அழிக்கும் **விச்வ ரூபஹரர்**, (ஐந்தாவது) பல

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உருவங்களாகத் தோற்றமளிக்கும் **பஹுரூபர்,** ஆறாவது முக்கண்ணரான **திரியம்பகர்,** ஏழாவது எவராலும் ஜயிக்கப்படமுடியாத **அபராஜிதர்,** எட்டாவது **விருஷாகபி,** ஒன்பதாவது மங்களத்தை அளிக்கும் **சம்பு,** பத்தாவது சடையோடு கூடிய **கபர்த்தி,** பதினொன்றாவது **ரைவதர்** (தனப்பெருக்கை அளிப்பவர்)''.

23. इत्येकादशरुद्राणां नामानि कथितानि ते ।
जामातारमनाहूय शिवं शान्त पिनाकिनम् ।। 23

23. இத்யேகாதச ருத்ராணாம் நாமானி கதிதானி தே ।
ஜாமாதாரமநா ஹூய சிவம் சாந்தம் பிநாகிநம் ।। 23

24. यज्ञमारब्धवान्दक्षः मामेकं च सतीपतिम् ।
इति विज्ञाय संकृद्धः भगवान्सोमशेखरः ।। 24

24. யக்ஞமாரப்தவான் தக்ஷ: மாமேகம் ச ஸதீபதிம் ।
இதிவிக்ஞாய ஸங்க்ருத்த, பகவான் ஸோமசேகர: ।। 24

25. प्रलयाग्निप्रभो रुद्रः सहस्रशिरसान्वितः।
द्विसहस्रकरो दीर्घः सकलायुधपाणिमान् ।। 25

25. ப்ரளயாக்னி ப்ரபோ ருத்ர: ஸஹஸ்ர சிரஸாந்வித: ।
த்விஸஹஸ்ரகரோ தீர்க: ஸகலாயுதபாணிமான் ।। 25

26. अट्टहासकरो भीमः द्विसहस्राक्षिसंयुतः।
महोग्रनर्तनाभिज्ञः सर्वसंहारताण्डवः ।। 26

26. அட்டஹாஸகரோ பீம: த்விஸஹஸ்ராக்ஷி ஸம்யுத: ।
மஹோக்ர நர்த்தனாபிக்ஞ: ஸர்வ ஸம்ஹார தாண்டவ: ।। 26

27. दक्षाध्वरं नाशितवान् ततो देवाः पलायिताः ।
अतः श्रीरुद्रदेवस्य पूजनात्सर्वदेवता ।। 27

27. தக்ஷாத்வரம் நாசிதவான் ததோ தேவா: பலாயிதா: ।
அத: ஸ்ரீ ருத்ர தேவஸ்ய பூஜனாத் ஸர்வ தேவதா: ।। 27

28. प्रीताश्च वरदाने याः सुमुख्यश्च भवन्ति ताः ।
तस्मात्त्वमपि देवेशं रुद्रं संपूजयाधुना ।। 28

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

28. ப்ரீதாச்ச வரதானேயா: ஸுமுக்யச்ச பவந்தி தா: ।
தஸ்மாத் த்வமபி தேவேசம் ருத்ரம் ஸம்பூஜயாதுநா ॥

23-28.(பொ.வி.):- இவ்வாறு ஏகாதச ருத்திரர்களுடைய பெயர்களை உனக்குக் கூறினேன். தன் மகளான சதிதேவியின் கணவரும், மங்களமானவரும், சாந்த குணமுடையவரும், பிநாகமென்னும் வில்லை ஏந்தியவரும், மாப்பிள்ளையுமான என்னை (மஹாதேவரை) மட்டும் அழையாமல் தக்ஷன் வேள்வி புரிந்தான். இதையறிந்து மிகக்கோபமடைந்து பகவானான சோமசேகரர் பிரளயகால அக்னிக்கு நிகரான ஜ்வாலையோடு கூடிய ருத்திரராக மாறி, ஆயிரம் தலைகளை உடையவராய், இரண்டாயிரம் கைகளை உடையவராய், மிக உயரமானவராய், ஆயுதங்கள் அனைத்தையும் கொண்ட கைகளையுடையவராய், இரண்டாயிரம் கண்களைக் கொண்டவராய், பயங்கரமான உருக்கொண்டவராய்த் தோன்றி அனைத்தையும் அழிக்கும் ஸர்வஸம்ஹார தாண்டவமாடி தக்ஷனின் யாகத்தை அழித்து ஒழித்தார். தேவர்கள் அனைவரும் அங்கிருந்து பயத்துடன் ஓடி விட்டனர்.

அதனால் ஸ்ரீருத்ரதேவருடைய பூஜனை யால் எல்லாத் தேவதைகளும் மகிழ்ச்சியடைந்தவர் களாகவும், வேண்டிய வரன்களையளிப்பதில் சிரித்த முகத்தோடு கூடியவர் களாகவும் ஆகின்றனர். அதனால் நீயும் தேவதேவனான ஸ்ரீருத்திரனை இப்பொழுது பூஜித்து மகிழ்விப்பாயாக. (தக்ஷயாக விநாசம் பற்றிய விரிவு கந்த புராணம், தக்ஷகாண்டத்தில் காண்க.)

29. तत्पूजनोपकाराय तन्नामानि वदामि ते ।
शृणुत्वं श्रद्धयोपेत: तन्नामानि वराणि च ॥

29. தத்பூஜனோபகாராய தந்நாமானி வதாமி தே ।
ச்ருணுத்வம் ச்ரத்தயோபேத: தந்நாமானி வராணி ச ॥

29. (பொ.வி.):- அவரைப் பூஜிப்பதற்கு உபகாரமாக அவருடைய பெயர்களை உனக்குக் கூறுகின்றேன். மிகுந்த சிரத்தையோடு சிறந்த அப்பெயர்களைக் கேட்பாயாக.

Digitization by Hindu-Heritage-Foundation and eGangotri

30. इत्युक्त्वा भगवान्देवो विष्णवे प्रभविष्णवे ।
रुद्रस्यारम्भमन्त्रोऽयं प्रणवः परिकीर्तितः ।।

30. இத்யுக்த்வா பகவான் தேவோ விஷ்ணவே ப்ரபவிஷ்ணவே ।
ருத்ரஸ்யாரம்ப மந்த்ரோऽயம் ப்ரணவ: பரிகீர்த்தி த: ।।

31. ततो नमश्चेति परं भगवते च ततः परम् ।
रुद्रायेति ततः पश्चात् मन्त्रक्रम उदीरितः ।।

31. ததோ நமச்சேதி பரம் பகவதே ச தத: பரம் ।
ருத்ராயேதி தத: பஸ்சாத் மந்த்ரக்ரம உதீரித: ।।

32. प्रत्यक्षरं नामशतं सहस्रं क्रमशो भवेत् ।
रुद्रनाम्नां सहस्रं च उपदिश्यान्तर्दधे प्रभुः ।।

32. ப்ரத்யக்ஷரம் நாமசதம் ஸஹஸ்ரம் க்ரமசோபவேத் ।
ருத்ரநாம்னாம் ஸஹஸ்ரம் ச உபதிஸ்யாந்தர்ததே ப்ரபு: ।।

30-32. **(பொ.வி.):-** இங்ஙனம் கூறி வல்லவரான மஹா விஷ்ணுவுக்கு பகவானான மஹாதேவர் ஸ்ரீருத்ரத்தின் ஆரம்பமந்திரம் (முதலில்) 'ஓம்' என்ற பிரணவம். அதற்குப் பிறகு 'நம;' என்பது, அதற்குப் பிறகு 'பகவதே' என்பது. அதன்பின்'ருத்ராய' என்பது என்று இவ்வாறு மந்திரத்தின் தொடர்பு கூறியருளப்பட்டது,''ஓம் நமோ பகவதே ருத்ராய'' என்பதே அந்தமந்திரம். இம்மந்திரத்தின் ஒவ்வொரு எழுத்திற்கும் நூறு பெயர்கள் வீதம் முறையே பத்து எழுத்துக்களுக்கும் ஆயிரம் திருப்பெயர்களையும் (மஹா விஷ்ணுவுக்கு) உபதேசம் செய்துவிட்டு சிவபெருமான் மறைந்து அருளினார்.

इति भृङ्गिरिटिसंहितायां शिवविष्णुसंवादे शिवोत्कर्ष -
प्रकरणे रुद्रसहस्रनामकथने पूर्वपीठिका समाप्ता ।।

இதி ப்ருங்கிரிடி ஸம்ஹிதாயாம் சிவவிஷ்ணு ஸம்வாதே சிவோத்கர்ஷ -
ப்ரகரணே ருத்ரஸஹஸ்ரநாம கதனே பூர்வபீடிகா ஸமாப்தா ।।

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

॥ न्यासः ॥ ॥ ந்யாஸ: ॥

अस्य श्री रुद्रसहस्रनामस्तोत्रमहामन्त्रस्य
भगवान् महादेवऋषिः देवी गायत्रीछन्दः ।

அஸ்ய ஸ்ரீ ருத்ரஸஹஸ்ரநாமஸ்தோத்ர மஹா மந்த்ரஸ்ய
பகவான் மஹாதேவ ரிஷி: தேவீ காயத்ரீ சந்த:

सर्वसंहारकर्ता श्रीरुद्रो देवता।
श्रीं बीजम्। रुं शक्तिः द्रं कीलकम्।
श्रीरुद्र प्रसादसिद्धयर्थे जपे विनियोगः।

ஸர்வ ஸம்ஹாரகர்த்தா ஸ்ரீ ருத்ரோ தேவதா
ஸ்ரீம் பீஜம், ரும் சக்தி:, த்ரம் கீலகம்
ஸ்ரீருத்ர ப்ரஸாத ஸித்யர்த்தே ஜபே வினியோக:

ओं अंगुष्टाभ्यां नमः	ஓம் அங்குஷ்டாப்யாம் நம:
नं तर्जनीभ्यां नमः	நம் தர்ஜனீப்யாம் நம:
मं मध्यमाभ्यां नमः	மம் மத்யமாப்யாம் நம:
भं अनामिकाभ्यां नमः	பம் அநாமிகாப்யாம் நம:
गं कनिष्ठिकाभ्यां नमः	கம் கனிஷ்டிகாப்யாம் நம:
वं करतलकरपृष्ठाभ्यां नमः	வம் கரதலகரப்ருஷ்டாப்யாம் நம:
तें हृदयाय नम	தேம் ஹ்ருதயாய நம:
रुं शिरसे स्वाहा	ரும் சிரஸே ஸ்வாஹா
द्रां शिखायै वषट्	த்ராம் சிகாயை வஷட்
यं कवचाय हुम्	யம் கவசாய ஹும்
ओं नेत्रत्रयाय वौषट्	ஓம் நேத்ரத்ரயாய வௌஷட்
श्रीं अस्त्राय फट्	ஸ்ரீம் அஸ்த்ராய பட்
भूर्भुवस्सुवरोमिति दिग्बन्धः।	பூர்ப்புவஸ்ஸுவரோமிதி திக்பந்த:

இதன்பொருள் : இந்த ஸ்ரீருத்ர ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரத்துக்கு பகவான் மஹாதேவர் ரிஷி, தேவீ காயத்ரீ

Digitization by Hindu-Heritage-Foundation (HHF-USA)

சந்தஸ், ஸர்வ ஸம்ஹார கர்த்தாவான ஸ்ரீருத்ரன் தேவதை, ஸ்ரீம் என்பது பீஜம், ரும் என்பது சக்தி, த்ரம் என்பது கீலகம், ஸ்ரீ ருத்ரனின் அருள் கைகூட ஜபத்தில் விநியோகம் (வேண்டுதல்), பிறகு அந்த மூல மந்திரங்களைக் கொண்டு அங்கந்யாஸ கரந்யாஸங்களையும் செய்து திக்பந்தம் செய்ய வேண்டியது. (ந்யாஸங்களின் விவரம் பக்கம் 30 முதல் காண்க). பிறகு த்யான ச்லோகம் சொல்ல வேண்டியது.

॥ ध्यानम् ॥ ॥ த்யானம் ॥

नेत्राणां द्विसहस्रकैः परिवृतमत्युग्रचर्माम्बरं
हेमाभं गिरिशं सहस्रशिरसं आमुक्तकेशान्वितम्।
घण्टामण्डितपादपद्मयुगलं नागेन्द्रकुम्भोपरि
तिष्ठन्तं द्विसहस्रहस्तमनिशं ध्यायामि रुद्रंपरम्॥

நேத்ராணாம் த்விஸஹஸ்ரகை : பரிவ்ருதம் அத்யுக்ர சர்மாம்பரம்
ஹேமாபம் கிரிசம் ஸஹஸ்ரசிரஸம் ஆமுக்தகேசான்விதம் ।
கண்டாமண்டித பாதமத்மயுகலம் நாகேந்த்ர கும்போபரி
திஷ்டந்தம் த்விஸஹஸ்ரஹஸ்தமனிசம் த்யாயாமி ருத்ரம்பரம் ॥

இதன்பொருள் : ஈராயிரங் கண்களோடு கூடியவரும், பயங்கரமான தோல்ஆடையை உடுத்தியவரும், தங்கமேனி யரும், மலையில் வாழ்பவரும், ஆயிரம் தலைகளோடு கூடியவரும், விரித்த கேசத்துடன் காட்சியளிப்பவரும், இருகால்களிலும் ஒலிக்கும் மணிகளோடு கூடிய கால் சிலம்புகளை அணிந்து கொண்டிருப்பவரும், பெரிய யானையின் மஸ்தகத்தின் மேல் நிலையாக இருப்பவரும், இரண்டாயிரம் கைகளோடு கூடியவருமான சிறந்த ஸ்ரீருத்ர தேவனைத் தியானம் செய்கிறேன்.

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

।। पंचपूजा।। ।। ।। பஞ்சபூஜா ।।

लं पृथिव्यात्मने गन्धं समर्पयामि ।

லம் ப்ருதிவ்யாத்மனே கந்தம் ஸமர்ப்பயாமி ।

हं आकाशात्मने पुष्पाणि समर्पयामि ।

ஹம் ஆகாசாத்மனே புஷ்பாணி ஸமர்ப்பயாமி ।

यं वाय्वात्मने धूपमाघ्रापयामि ।

யம் வாய்வாத்மனே தூபமாக்ராபயாமி ।

रं वह्न्यात्मने दीपं दर्शयामि ।

ரம் வஹ்ன்யாத்மனே தீபம் தர்சயாமி ।

वं अमृतात्मने अमृतं निवेदयामि ।

வம் அம்ருதாத்மனே அம்ருதம் நிவேதயாமி ।

सं सर्वात्मिने सर्वोपचारान्समर्पयामि ।

ஸம் ஸர்வாத்மனே ஸர்வோபசாரான் ஸமர்ப்பயாமி ।

इति मानसिकोपचारान्कुर्यात् ।

ततः परं सहस्रनाम-स्तोत्रपारायणं कर्तव्यम् ।

पारायणसमाप्तौ अङ्गन्यासमात्रं कृतवा

ध्यात्वा 'इति दिग्विमोगः' इति वदेत् ।

ततः लमित्यादि पंचपूजां च कुर्यात् ।

இதி மானஸிகோபசாரான் குர்யாத்।

ததः பரம்ஸஹஸ்ர நாமஸ்தோத்ர பாராயணம் கர்த்தவ்யம்।

பாராயண ஸமாப்தௌ அங்கந்யாஸ மாத்ரம் க்ருத்வா।

த்யாத்வா 'இதி திக்விமோகः' இதி வதேத்।

ததः லமித்யாதி பஞ்சபூஜாம் ச குர்யாத்।।

Digitization by Hindu-Heritage-Foundation.org

இதன் பொருள் : மானஸீகமாக மந்திரங்கூறி பஞ்சபூஜை செய்யவேண்டும் (பக்கம் 46, 72 காண்க). பிறகு ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரத்தை உத்தரபீடிகை உள்பட, வேகமில்லாமல் அக்ஷரப்பிழை இல்லாமல் உரத்த குரல் இல்லாமல், பொருள் உணர்ந்து பாராயணம் செய்ய வேண்டும். பாராயணம் செய்து முடித்த பிறகு அங்கநியாஸம் மட்டும் மந்திரங்களைக்கூறிச் செய்து விட்டு, தியானம் செய்து 'திக்விமோகம்' என்று கூறி பஞ்சபூஜையை மானஸீகமாகச் செய்து முடிக்க வேண்டும். (இதுவே பாராயண முறை). பாராயணம் முடிந்த பிறகு **ஓம் தத் ஸத் ஸாம்ப சிவார்ப்பணமஸ்து** என்று கூறிப் பூர்த்தி செய்ய வேண்டும்.

ருத்திரப் பெயர் விளக்கம்

பரப்ரும்மணி ஸர்வேசே மஹாதேவே த்ரியம்பகே
நீலக்ரீவே ருதானந்த போததுத்தாம்புதௌ சிவே
ருஜம் த்ராவயதீஷ்டானாம் பக்தானாம் தயயாஹ்ருயஸௌ
வர்ததே யோகரூடிப்யாம் தந்நாமேதம் சுபாவனே.

- ஸ்காந்த புராணம், தக்ஷகாண்டம்,
அத்யாயம் 12, சுலோகம் 23,24

இ-ள்: தனக்கு இஷ்டர்களான பக்தர்களுக்கு தயவினால் அவர்களுடைய துக்கத்தைப் போக்குவதால் பரப்ரும்மமும், ஸர்வேசரும், மஹாதேவரும், முக்கண்ணரும், நீலகண்டரும், ஸத்யானந்த ஞானப்பாற்கடலும், மிகப்பரிசுத்தருமாகிய அந்தப் பரமசிவனிடத்திலேயே ''ருத்ரன்'' என்ற பெயரானது காரணப்பெயராகவும் இடுகுறிப் பெயராகவும் பூரணமாய்ப் பொருந்தி இருக்கிறது.

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

।। श्रीरुद्रसहस्रनामस्तोत्रम्।।

